# சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு தொடர்பான அகில இலங்கை ரீதியிலான போட்டித்தொடர்




**சமூகக் கலந்துரையாடல் மற்றும்**
**வேலைத்தலக் கூட்டுறவுப் பிரிவு**
**தொழிற் திணைக்களம்**
**நாரஹேன்பிட்ட**
**கொழும்பு - 05.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டியின் நோக்கம்

1. சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு பற்றிய செய்தியைப் பரப்புதல்.

2. சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு தொடர்பாக வேலை கொள்வோர், வேலை செய்வோர் ஆகிய இருபிரிவினருக்கும் அறிவூட்டுதல்.

3. சமூக கலந்துரையாடல் மூலம் ஏற்படும் வேலைத்தலக்-கூட்டுறவு தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே சமூகக் கலந்துரையாடலை ஊக்குவித்தல்.

4. வேலைகொள்வோர்-வேலைசெய்வோர் ஆகிய இரு தரப்பினரின் படைப்புத் திறமைகளை மேம்படுத்துவதன் மூலம் அவர்களிடையே மிகச்சிறந்த வேலைத்தலச் சூழலைக் கட்டி-யெழுப்புவதற்கு, பங்களிக்கச் செய்தல்.


5. சமூகக் கலந்துரையாடல் பிரிவின் மூலம் செயற்படுத்தப்படும் செயலமர்வுகளில் பங்கு-பற்றியோரிடையே சமூகக் கலந்துரையாடல்கள் தொடர்பாக ஏற்பட்ட விளக்கம் மற்றும் அது தொடர்பான படைப்பாற்றல் என்பவற்றை மதிப்பீட்-டுக்கு உட்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு தொடர்பான அகில இலங்கை ரீதியிலான போட்டி

தொழில் திணைக்களத்தின் கைத்தொழில் உறவுகள் பிரிவின் சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு கிளையானது சமூகக் கலந்துரையாடலினூடாகக் கட்டியெழுப்பப்படுகின்ற வேலைத்தலக் கூட்டுறவு மற்றும் கைத்தொழில் உறவுகள், கைத்தொழில் அமைதி ஆகியவையூடாக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துகின்றது. அந் நோக்கத்தைச் செயற்படுத்துவதற்காக இந்த நாட்டின் உற்பத்தித்துறை மற்றும் தொடர்புடைய நிறுவனங்களில் சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவை மேம்படுத்துவதற்கென 2012 ஆம் ஆண்டிலிருந்து நாடு முழுவதற்கான போட்டிகளை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொ-ள்ளப்படுகின்றது.


## 01. போட்டியாளர்கள்



- ★ கடந்த வருடங்களில் சமூக கலந்துரையாடற் பிரிவு, மாவட்டதொழில் அலுவலகங்கள் மற்றும் உப தொழில் அலுவலகங்கள் மூலம் நிகழ்ச்சியை நடாத்திய நிறுவனங்களின் வேலை கொள்வோர், வேலை செய்வோர் ஆகிய இரு தரப்பினரும் இதில் பங்கு கொள்ள முடியும்
- ★ தொழிற் திணைக்கள அலுவலர்களுக்கு அல்லது அவர்களின் குடும்பத்தி-னருக்கு போட்டிகளிற் பங்கு கொள்வதற்கு அனுமதி இல்லை.

## 02. நடைபெறும் போட்டி

பின்வரும் 5 நிகழ்ச்சிகளின் கீழ் இப் போட்டிகள் ஒழுங்கமைக்கப்படும்.



- ★ கவிதைப் போட்டி
- ★ கட்டுரைப் போட்டி
- ★ ஓவியப் போட்டி
- ★ சுவரொட்டி (போஸ்டர்) உருவாக்கும் போட்டி
- ★ சிறிய வீடியோ நிகழ்ச்சி தயாரிக்கும் போட்டி (Video Clips)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03. போட்டி நிகழ்ச்சி தலைப்புகளும் போட்டிக்கான படைப்புகளை சமர்ப்பித்தலும்.

அனைத்துப் போட்டி நிகழ்ச்சிகளுக்காகவும் பின்வரும் தலைப்புகளில் ஒன்றின் கீழ் படைப்பினைச் சமர்ப்பிக்க முடியும்.

1. கலந்துரையாடல் மூலம் நிறுவனரீதியான ஒத்துழைப்பினைக் கட்டியெழுப்புவோம்
2. ஒத்துழைப்பு கைத்தொழில் அமைதிக்கான வழிமுறையாகும்
3. கைத்தொழில் அமைதியின் மூலம் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தல்
4. நிறுவனரீதியான ஒத்துழைப்பும் உற்பத்தித்திறனும்
5. பயனுள்ள மற்றும் வினைத்திறன் நிறைந்த உற்பத்திக்காக கலந்துரையாடல்
6. கலந்துரையாடல் மூலம் நிறுவனங்களிலுள்ள பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வோம்
7. சிறந்த வேலைச் சூழல் உற்பத்தியை அதிகரிக்கும்



### ★ கவிதைப் போட்டி

மேற்படி தலைப்புகளில் தெரிவு செய்யப்பட்ட தலைப்பொன்றில் ஐந்து (5) பகுதிகள் அடங்கிய நால்வரிப்பாடல்கள் கொண்ட படைப்பு இப்போட்டிக்குரியதாகும்.அனைத்துப் படைப்புகளும் A4 தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவான கையெழுத்தில் சமர்ப்பி-க்கப்பட வேண்டும்.

### ★ கட்டுரைப் போட்டி

மேற்படி தலைப்புகளுள் தெரிவுசெய்யப்பட்ட தலைப்பொன்றில் 750-1000 சொற்களுக்குட்பட்ட படைப்பு A4 தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவான கையெழுத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

### ★ ஓவியம் மற்றும் சுவரொட்டிப் (போஸ்டர்)- போட்டி



- தெரிவுசெய்யப்பட்ட தலைப்பொன்றில் பிரிஸ்டல் போட் ஒன்றைப் பயன்படுத்திப் படைப்பை உருவாக்கவும்
- சுற்றிவர 01 அங்குலம் இடைவெளி விட்டு படைப்பை அமைத்துக் கொள்ளவும்
- படைப்பிற்காக பெஸ்டால், நிறச்சாயம் அல்லது தேர்ந்தெடுத்த எந்தவொரு வர்ணக் கலவையைப் பயன்படுத்தலாம்

### ★ சிறிய வீடியோ நிகழ்ச்சிப் போட்டி

மேற்படி தலைப்புகளுள் தெரிவுசெய்யப்பட்ட தலைப்பொன்றில் படைப்பினைச் சமர்ப்பிக்க முடியும்.

அனைத்துப் படைப்புகளும் 5 - 10 வினாடி கால அளவில் அமைக்கப்பட வேண்டும். MPEG, Mp4 format ஐ பயன்படுத்தி இறுவட்டு (CD) மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. போட்டியிற் பங்குகொள்ளல்

- ★ இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கமைய தாமே தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்தை பயன்படுத்த வேண்டும்.

- ★ உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை நிறுவனத் தலைவரின் பதவிமுத்திரையுடன் உறுதிப்படுத்தி தமது படைப்புடன் சமர்ப்பிக்க வேண்டும்.

- ★ அனைத்துப் படைப்புகளும் இந்த வருடம் ஜூன் மாதத்திற்கு முன் கிடைக்கக்கூடியதாக தபால் மூலம் அனுப்பப்படலாம் அல்லது சமூகக் கலந்துரையாடற் பிரிவில் நேரில் கையளிக்கலாம்.

### உதவி தொழில் ஆணையாளர்,

**சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவுப் பிரிவு,**
**06 ஆம் மாடி,**
**தொழிற் திணைக்களம்,**
**நாரஹேன்பிட்ட,**
**கொழும்பு 05.**

மேற்படி முகவரிக்குக் கிடைக்கத்தக்கதாக தபால் மூலம் படைப்பினை சமர்ப்பிக்க வேண்டும். நேரில் கையளிப்பதாயின் எந்தவொரு கடமை நாளிலும் மு.ப 8.30 மணி முதல் பி.ப 3.00 மணிவரை பிரதான காரியாலயத்தில் ஒப்படைக்க முடியும். குறித்த போட்டி நிபந்தனையை மீறுகின்ற அல்லது குறித்த தினத்திற்குப் பிறகு கிடைக்கின்ற படைப்புகள் போட்டியிலிருந்து நீக்கப்படும். போட்டிகளின் தீர்ப்பு தொடர்பான இறுதி முடிவுகள் நடுவர் குழுவினால் தீர்மானிக்கப்படும் அதேவேளை, போட்டி தொடர்பான இறுதித்தீர்மானங்கள் போட்டி ஏற்பாட்டுக்குழுவிற்கு உரித்துடையதாகும்.




ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள முடியும். எனினும் ஒரு போட்டிக்காக ஒரு படைப்பினை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு படைப்புடனும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை உரியவாறு நிரப்பி உறுதிப்படுத்திச் சமர்ப்பிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05. போட்டியில் வெற்றிபெறுவோருக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கல்

அனைத்துப் போட்டிகளுக்காகவும் சமர்ப்பிக்கப்படும் படைப்புகள் யாவும் சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவுப் பிரிவின் மூலம் தெரிவு செய்யப்பட்ட அறிஞர்கள், சுதந்திரமான பக்கச்சார்பற்ற நடுவர்கள் குழுவிற்கு முன்வைக்கப்பட்டு வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஓவியப் போட்டி தவிர்ந்த ஏனைய எல்லா போட்டிகளிலும் சிங்கள, தமிழ் மொழி மூலம் இரண்டிலும் வேறு வேறு வெற்றியாளர்களாக ஐந்து பேர் தெரிவுசெய்யப்படுவர்.

முதலாவது,
இரண்டாவது,
மூன்றாவது இடங்கள் பெறுவோருக்கு விருது மற்றும் சான்றிதழ் வழங்கப்படுவதோடு நான்காவது, ஐந்தாவது இடங்களுக்காக தகைமைச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

வெற்றி விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் வைபவத்தை இந்த ஆண்டின் நவம்பர் மாதத்தில் தொழில் திணைக்கள தலைமை அலுவலகத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதிரி விண்ணப்பப்படிவம்
# சமூகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவு தொடர்பான அகில இலங்கை ரீதியிலான போட்டித்தொடர்

01. போட்டியாளரின் முதலெழுத்துக்களுடன் பெயர் :

02. முழுப்பெயர்:

03. முழுப்பெயர்:
(ஐெ டீடழஉம டுநவவநசள)

04. பிரத்தியேக முகவரி:

05. பிரத்தியேக முகவரி:
(ஐெ டீடழஉம டுநவவநசள)

06. தொலைபேசி இல:
காரியாலயம்- தனிப்பட்ட:

07. தற்போது சேவைபுரியும் நிறுவனம்:

08. சேவைபுரியும் பிரிவு மற்றும் பதவி:

09. பங்குகொள்ளும் போட்டி:

10. தலைப்பு:

11. போட்டியிற் பங்குகொள்ளும் மொழி மூலம்: சிங்களம்.'.தமிழ்

மேற்படி போட்டியின் அனைத்து நிபந்தனைகளுக்கும் இணங்குவதோடு, இத்துடன் சமர்ப்பிக்கப்படும் படைப்பு என்னால் உருவாக்கப்பட்ட படைப்பு என்பதைத் தெரிவிக்கின்றேன்.

திகதி .................................. ..................................

விண்ணப்பதாரியின் ஒப்பம்

மேற்படி படைப்பு எமது நிறுவனத்தில் சேவைபுரியும் ............................................................ போட்டியாளரின் படைப்பு என்பதைச் சான்றுப்படுத்துகின்றேன்.

திகதி .................................. ..................................

முகாமையாளர் / நிறுவனத்
தலைவரின் ஒப்பம் - பதவி முத்திரையுடன்

---

<u>அலுவலகப் பயன்பாட்டுக்காக</u>

மேற்படி படைப்பினை சிபாரிசு செய்கின்றேன் / செய்யவில்லை

திகதி .................................. ..................................

(உதவி தொழில் ஆணையாளர்-சமூக
கலந்துரையாடற் பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தப் போட்டி தொடர்பான மேலதிக விபரங்களைப் பின்வரும் முகவரியிற் பெற்றுக் கொள்ளலாம்


**உதவி தொழில் ஆணையாளர்,**

சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தலக் கூட்டுறவுப் பிரிவு,

06 ஆம் மாடி,

தொழிற் திணைக்களம்,

நாராஹேன்பிட்ட,

கொழும்பு 05.

தொலைபேசி இல : 011 2586313 / 011 2500065

தொலைநகல் : 011 2586313



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org